www.tamilarangam.net

# மரண அறிவித்தல்





தோற்றம்
**16. 03. 1956**

மறைவு
**28. 09. 2004**

## தி. உமாகாந்தன்

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டு, யாழ்ப்பாணத்திலும், பின்னர் பிரான்ஸிலும் வசித்துவந்த திரு. தில்லையம்பலம் உமாகாந்தன் அவர்கள் 28.09.2004 செவ்வாய்க்கிழமைஅன்று பிரான்ஸில் காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகிறோம்.

இவர் கரவெட்டி வடக்கைச்சேர்ந்த தில்லையம்பலம் மகேஸ்வரி அவர்களின் அன்புமகனும், திரு. விஜயகுமார் (இலங்கை), திருமதி. பவானி (இலங்கை), திருமதி. உமா (இலங்கை), திரு. குகேந்திரன் (குகன், பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், சூரியகுமாரி (சூட்டி, கனடா) அவர்களின் அருமைக் கணவரும், ஆதித்தியனின் பாசமிகு தந்தையும் ஆவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் **4. 10. 2004** திங்கட்கிழமை மதியம் 12.30 மணிக்கு Gonesse ஆஸ்பத்திரிக்கு அருகிலிருக்கும் **La Maison Funéraire (1, ave. du Maréchal Juin - 95500 Gonesse -** - RER D - Villiers le Bel Gonesse**)** இல் நடைபெற்றபின் பிற்பகல் 2.00 மணிக்கு **VILLETENEUSE** மயானத்தில் தகனம் செய்யப்படும்.

மயான முகவரி : **95, RUE MARCEL SEMBAT - 93430 VILLETENEUSE**

Bus: 168 de Gare Sarcelle , Pierffet ou Porte de Paris (Demander au chauffeur de bus le cimetière)

**இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.**

தகவல் : குடும்பத்தினர், நண்பர்கள்

**மேலதிக விபரங்கள் தொடர்புகளுக்கு :**

01 34 69 90 56
01 39 84 09 87
06 12 33 81 10
06 08 94 08 60
001/416/ 43 82 189 கனடா
06 03 67 44 20
06 80 15 59 14

www.tamilarangam.net

# கண்ணீர் அஞ்சலி



தோழர் உமாகாந்தன் இலங்கையில் மனிதன் பத்திரிகைக்குழுவில் தனது சமூகப்பணியை ஆரம்பித்தவர்.அவர் கால் நூற்றாண்டுகாலத்திற்கு முன்னர் பிரான்சின் தலைநகர் பாரிசிற்கு வந்தவர். பிரெஞ்சு மொழியில் நல்ல பரிச்சயமுள்ளவர் தோழர் உமாகாந்தன். 1983 இற்குப்பின்னர் புகலிடம் தேடிச் சென்ற தமிழர்களுக்கு தன்னாலான உதவியைச் செய்தவர்.

பரிசில் தமிழர் விடுதலைப்பேரவை என்ற அமைப்பில் நண்பர்கள் பலருடன் செயற்பட்டார்.பின்னர் இவர்கள் ஈபிஆர்எப்எப் இல் இணைந்து கொண்டனர். முதலாவது சங்கே முழங்கு கலைஞர்களை ஒன்றிணைக்கும் நிகழ்ச்சி பரிசில் தோழர் உமாகாந்தனால் முன்னெடுக்கப்பட்டது. பாரிசில் « ஈழச் செய்திகள் » என்ற ஈபிஆர்எல்எப்பின் மாதாந்த செய்தி வெளியீட்டை வெளிக் கொணர்வதில் பங்களித்ததார் .பல புலம்பெயர் சங்சிகைகளில் அவரது கட்டுரைகள் வெளிவந்தன. தொலைபேசிச் செய்திச் சேவையையும் ஆரம்பித்து வைத்தார். ஜேர்மன், பிரான்ஸ் இடதுசாரிகளுடன் தொடர்புகளைவைத்திருந்தார். தமிழ் முரசு, ஈழமுழக்கம், கண்ணோட்டம் ஆகிய ஈபிஆர்எல்எப் சார்பத்திரிகைகளிலும் தாயகம், உயிர்நிழல் உட்பட்ட தன்னார்வ சஞ்சிகைகளிலும் அவர் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். அவர் ஒரு கவிஞரும் கூட. ஈபிஆர்எல்எப் இன் பெரும்பாலான ஐரோப்பிய பிரசுரங்கள் அவரால்தான் எழுதப்பட்டன. ஆரவாரம் காட்டாமல் வேலை செய்த மனிதர். அவரது விருப்பமான எழுத்து அனேகமாக சர்வதேச சமகால விடுதலை இயக்கங்கள் பற்றியனவாக இருந்தன. சான்டிநிஸ்டா ஆட்சிக்காலத்தில் நிக்கரகுவா சென்று புரட்சியாளர்களுடன் சமூக மறுநிர்மாணப்பணிகளில் ஈடுபட்டவர். அவரது மரணத்திற்கு தனிமையும் ஒரு காரணமாக இருந்தது. சமூக வாழ்வில் ஈடுபட்டபலமனதிர்களுக்கு ஏற்பட்டபிரச்சனைபோல் இவருக்கும் ஏற்பட்டு, கடுமையாக நோய்வாய்ப்பட்டு, அண்மைக்காலமாக மரணத்துடன் போராடிக்கொண்டிருந்தார். புலம்பெயர்ந்த தளத்தில் தனக்கு வழமான வாழ்க்கையைத் தேடிக்கொண்டவர்அல்ல உமாகாந்தன். தனது மனச்சாட்சி அழைதத்பாதையில் துன்பங்களினூடாகப்பயணித்தா

தோழாஉமாகாந்தனுக்கு *ஈழமக்களபுரட்சிகர விடுதலைமுன்னணியின்* அஞ்சலிகள்

*ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி*

**E.P.R.L.F** *சர்வதேச கிளைகளின் ஒன்றியம்*

www.tamilarangam.net

# அஞ்சலி

## தி. உமாகாந்தன்



அன்பில்
கட்டுண்டு கிடந்தவனே
உமாகாந்தனே!

தோற்றம்
16.03.1956

கூர்மையான அரசியல்
விமர்சகன் நீ
நேர்மையான சட்ட
ஆலோசகன் நீ
சமூகம் - இன்நாளை
தன் கறுப்புத்தினமாக
பதிந்து கொள்ளும்!



மரணபயம்
அற்றவன் நீ : ஆனால்
உன் மரணமும்
நாளையின் வெறுமையும் : எம்
புத்தியில் மோதி உடைகிறது!

உனக்கும்
எமக்குமான உறவு
துச்சமான மரணத்திலா
அறுந்து போகும்!

மரணம்
உன் காலடியில் கிடந்து
எத்தனை நாள் காத்திருந்ததோ!?
நெருப்பு
உன்னை தீண்ட பயந்து - நாளை
தனக்குள் சுருங்கிக் கொள்ளுமோ!

உமாகாந்தனே
நீ
மரணிக்கமுடியாது
உனக்கு
மரணம் கிடையாது!

மறைவு
28.09.2004



என்றும் உங்கள் பிரிவால் வாடும்
**விஷ்ணு நண்பர்கள்**
பாரீஸ்
04.10.2004

www.tamilarangam.net

# உமாகாந்தன்!



உள்ளத்தின் நினைவாக...

# நினைவஞ்சலிக் கூட்டம்

எல்லோரும் இறக்க வேண்டியவர்கள்தான்
ஆனால் இறப்பு என்பது அதன் முக்கியத்துவத்தில் வேறுபட்டது.
"ஒரேமாதிரி எல்லோருக்கும் மரணம் ஏற்பட்டாலும்.
அது மலையைவிடத் தாக்கானதாக இருக்கலாம் அல்லது
இறகைவிட இலேசானதாக இருக்கலாம்" என்று
புராதன சீனத்து எழுத்தாளர் ஸீமா சியென் கூறினார்.
மக்களின் நலன்களுக்காக மரணமடைவது மலையை விடத் தாக்கானது
ஆனால் பாஸிஸ்டுகளுக்காக உழைத்து சுரண்டுவோருக்கும்
ஒடுக்குமுறையாளருக்குமாக இறப்பது இறகைவிட இலேசானதாகும்.

- மாஓ -

**ஒக்ரோபர் 31ம் திகதி 2004**
ஞாயிறு பிற்பகல் 2.00 மணி

சபாலிங்கம் மண்டபம் — Salle Pablo Neruda (à côté de la piscine)
95140 GARGES LES GONESSE (Gare : Garges Sarselles - RER D

அனைவரையும் தோழமையோடு அழைக்கின்றோம்.

ஏற்பாட்டாளர்கள் : உமாகாந்தன் நண்பர்கள்

www.tamilarangam.net

# தமிழ் முரசு

## உமாகாந்தன்

மனதில் குடியிருக்கும் அன்புத் தோழனே – நண்பனே.
உன்னை மறவாது உனது நினைவில் நாம் ஒன்று
கூடுகிறோம்.

# 31.10.2004

ஞாயிற்றுக் கிழமை
காலை 10 மணி தொடக்கம்

ஒன்று கூடல்:
சபாலிங்கம் மண்டபம்
(நீச்சல் தடாகத்துக்கு அருகாமை)
**Salle de Neruda**
**95140 Garges les Gonesse**
**RER 'D' : Garges - Sarcelles**

எம்மை விட்டு உமா பிரிந்த ஒரு மாத நினைவு
ஒன்று கூடலிலும், மதிய உணவுப் பகிர்விலும்
பங்கு கொள்ள அவரின் அன்பாளர்களை
உரிமையுடன் அழைக்கிறோம்.

**நன்றி**

மாற்றுக் கருத்துக்களுக்கான தோழர்கள் - நண்பர்கள் வட்டம்
பிரான்ஸ்.